Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 17 Click - 6

SEPTEMBER 2021 ₹ 1

## ட்ரோன்களுக்கு தளர்வு களுடன்கூடிய 2021க்கான புதிய விதி முறைகள்!

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒளிப் படத் துறையில் கோலோச்சி இருந்த பிலிம் தொழில்நுட்பம், டிஜிட்டல் போட்டோகிராபியாக மாறிய பிறகு, ஒளிப்பட துறையில் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக ஆளில்லா விமானம் என்று அழைக்கப்படும் ட்ரோன்கள் மூலம் எடுக்கப்படும் ஏரியல் வியூ ஒளிப்பதிவுகளுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இதனால் திருமணம் சார்ந்த ஒவ்வொரு போட்டோகிராபி குழுவிலும் ட்ரோன்களின் தேவை என்பது அவசியமான ஒன்றாக மாறிப் போயுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்புவரை எவ்வித கட்டுப்பாடும் இன்றி ட்ரோன்கள் வான்வெளியில் வட்டமிட்டுப் பறந்து வந்தன. 2018ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டுவந்த கட்டுப்பாடுகள் காரணமாக ட்ரோன்களை வான்வெளியில் பறக்கவிட ட்ரோன் ஆப்பரேட்டர்கள் அச்சப்பட்டார்கள். ட்ரோன்களுக்காக மத்திய அரசு அப்போது கொண்டுவந்த விதிமுறைகளில் மத்திய மாநில அரசுகள் போதிய புரிதல் இல்லாமல் இருந்தது பல்வேறு குழப்பங்களில் இருந்து ட்ரோன் பயன்பாட்டாளர்கள் தெளிவாக புரிந்து கொண்டார்கள். இதன் காரணமாக அன்று ட்ரோன்களை பயன்படுத்தியவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் மத்திய அரசு கூறியபடி பதிவு செய்யாமல் இருந்து விட்டனர். இதே காலகட்டத்தில் பல்வேறு துறையை சேர்ந்தவர்கள் ட்ரோன்களை வெவ்வேறு விதமாக பயன்படுத்த தொடங்கினார்கள். மேலும் உலக அளவில் ட்ரோன்களின் வளர்ச்சி என்பது அபரிமிதமாக இருந்தது. ஆனாலும் இந்தியாவில் பாதுகாப்பு காரணமாக ட்ரோன்கள் பறக்கவிட அனுமதி கிடைக்காது என்றே பலரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்திய அரசு இதற்கு நேர்மாறாக 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை உலகளாவிய ட்ரோன் மையமாகும் முயற்சியில் ஈடுபடும் எனத் தெரிகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் இந்திய ட்ரோன் வர்த்தகம் 50 ஆயிரம் கோடியை எட்டும் என்று கணிக்கப்படுகிறது. இதன் காரணமாக 2021 ஆம் ஆண்டு ட்ரோன்களுக்கு எளிமையாக்கப்பட்ட பெரும் தளர்வுகளுடன் கூடிய புதிய சட்ட விதிமுறைகளை அறிவித்துள்ளது.

ட்ரோன்களை கண்காணிக்க, உரிமம் பெற, ஒப்புதல் மற்றும் சான்றிதழ் வழங்க டிஜிட்டல் ஸ்கை எனும் பிளாட்பார்ம் மத்திய அரசு அமைத்துக் கொடுத்துள்ளது. ட்ரோன்கள் குறித்து எல்லாத் தகவல்களையும் இங்கே கேட்டு பெற முடியும். ட்ரோன்களின் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் முறையும் மிகவும் எளி தாக்கப்பட்டுள்ளது. கட்டண முறையில் பெருமளவில் பெரும் அளவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நானோ மற்றும் மைக்ரோ( 251 கிராம் முதல் 2 கிலோ கிராம் எடையுள்ளது வரை) ட்ரோன்கள் வைத்திருப்பவர்களுக்கு, ட்ரோன் பைலட் உரிமம்

தேவைப்படாது. இது தவிர மாடல் ரிமோட் பைலட் விமான அமைப்பு மற்றும் நானோ ட்ரோன்களுக்கு சான்றிதழ் தேவையில்லை. விமான நிலையங்கள் மற்றும் சிவப்பு மண்டலங்களில் ட்ரோன்கள் தொடர்ந்து தடை செய்யப்படும் என்று செய்திக் குறிப்பு கூறுகிறது. உள் மஞ்சள் மண்டலங்களுக்கு விமானப் போக்குவரத்து கட்டுப்பாடு அனுமதி தேவைப்படும். வெளிப்புற மஞ்சள் மண்டலங்களுக்கு விமான நிலைய சுற்றளவில் இருந்து 8 முதல் 12 கிலோ மீட்டர் வரை 200 அடிவரை பறக்க அனுமதி தேவையில்லை. பச்சை மண்டலங்களுக்கும் ட்ரோன்கள் 400 அடி வரை பறக்க அனுமதி தேவையில்லை. மேலும் 2021 ஆம் ஆண்டின் புதிய விதிமுறைகளின்படி அதிகபட்சமாக அபராதத் தொகை ஒரு லட்சம் ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. எனினும் சட்டத்திற்கு செயல்படுபவர்களுக்கு இது பொருந்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

உலக அளவில் ட்ரோன்களின் பயன்பாடு

என்பது, இப்போது வெவ்வேறு துறையைச் சார்ந்தவர்கள் அதிகமாக பயன்படுத்த தொடங்கி விட்டார்கள். இந்தியாவிலும் இந்நிலை தொடரும் என்று கணிக்கப்படுகிறது. ட்ரோன்களின் தாராளமயமாக்கல் கொள்கை அறிவிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாடு , ஆந்திரா, தெலுங்கானா, பெங்களூரு , மும்பை, பூனே , டெல்லி , குஜராத், மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் பத்துக்கும் மேற்பட்ட ஆரம்ப நிலை ட்ரோன் நிறுவனங்கள் மத்திய அரசிடம் அனுமதி பெற்று விட்டதாக தெரிகிறது. இவை பெரும்பாலும் விவசாயம் , சுரங்கம், உள்கட்டமைப்பு, தொலைத்தொடர்பு, பேரிடர் மேலாண்மை, எண்ணெய் மற்றும் எரிவாயு ,சட்டம் மற்றும் அமலாக்கம் ,உணவு மற்றும் மருந்துகளை டெலிவரி செய்வது போன்ற காரணங்களுக்காக அனுமதி கேட்டு இருப்பதாகவும் தெரிகிறது. பெங்களூருவில் இரண்டு கிலோ கிராம் மருந்து பொருட்களை ஏற்றிக்கொண்டு மூன்று கிலோமீட்டர் தூரத்திற்கு சோதனை ஓட்டமும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. பல நிறுவனங்கள் இந்தியாவில் ட்ரோன்களை வடிவமைத்து தயாரித்து, சில குறிப்பிட்ட கூறுகளை அமெரிக்கா , ஐரோப்பா, சீனா போன்ற நாடுகளிலிருந்து இருந்து இறக்குமதி செய்து ட்ரோன்களை அசம்பிள் செய்ய தயாராகி வருகின்றனர்.

திருமண மண்டபங்கள் திருவிழாக்களில் அரசியல் கூட்டங்களில் மட்டுமே வானில் வட்டமிட்டு பறந்து ஒளிப்பதிவு செய்து வந்த ட்ரோன்கள், இனி கமர்சியலாக மாறி, நெருக்கடியான பகுதிகளில் சுமைகளை தூக்கி செல்லும் காட்சிகளை அடிக்கடி நாம் காணமுடியும். குறிப்பாக சென்னையில் நெருக்கடி மிகுந்த பகுதியான கோயம்பேடு, என்எஸ்சி போஸ் ரோடு, டி .நகர் போன்ற இடங்களில் ட்ரோன்களின் தேவை இனி நிச்சயம் இருக்கும். அதேசமயம் எதிர்காலத்தில் ட்ரோன் பைலட்டுக்கான வேலைவாய்ப்பும் பெருகும் என்று தெரிகிறது.

# வருந்துகிறோம்



வீடியோ உலகின் பிரம்மா என்றும் ஒளிப்படக் கலையின் ஆசான் என்றும் அனைவராலும் போற்றப்பட்ட, சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கத்தின் கௌரவத் தலைவர் , **சரவணா வீடியோ அதிபர் . ஐயா. க. கணேசன்** அவர்கள் நம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்தார், என்பதை கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். அண்ணாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு ,<br>
CVPA உறுப்பினர்கள்,<br>
சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை வீடியோ மற்றும்<br>
புகைப்பட கலைஞர்கள் சங்கம்,<br>
புர்ரா தெரு, எல்லிஸ் ரோடு, சென்னை 2.

# நவீன தொழில்நுட்ப மாற்றங்களை DSLR தாக்குப்பிடிக்குமா?

டிஎஸ்எல்ஆர் ஆயுட்காலம் குறைவுதான்!

கடந்த சில வருடங்களாக ஒளிப்பட தொழில்துறையில் மிரர்லஸ் கேமராக்களை பயன்படுத்துவோர் எண்ணிக்கை, அதிகரித்து காணப்படுவதுடன், திருமணம் சார்ந்த நிகழ்வுகளில் மிரர்லஸ் கேமராக்களின் ஆதிக்கமே, மேலோங்கி இருப்பதாக ஒளிப்படக் கலைஞர்கள் கூறுகின்றனர். காரணம். மணமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நாகரீக மாற்றம், திருமணம் குறித்த தங்கள் நீண்ட நாள் கனவுகளை, ஒளிப்பதிவு செய்து, அதை சமூக ஊடகங்களில் பகிர்ந்து லைக் அள்ளுவது, நெருங்கிய நண்பர்களிடம் பகிர்ந்து மகிழ்வது, என இது போன்ற மன மாற்றங்கள் ஏற்பட்டதன் விளைவாக கேண்டிட் மற்றும் சினிமாட்டிக் ஷுட் மீது மணமக்கள் இடம் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. எனவே, இப்போது இன்ஸ்டாகிராம் முகநூல் போன்றவை, போட்டோகிராபி தொழிலுக்கு புதிய நுழைவாயிலாக அமைந்துள்ளது . எனவே, வாடிக்கையாளர்களை கவர இன்றைய இளம் ஒளிப்படக் கலைஞர்களின் தேர்வு என்பது, மிரர்லஸ் கேமராவாகவே இருந்து வருகிறது. வாடிக்கையாளர்கள் மற்றும் ஒளிப்பட கலைஞர்களிடம் ஏற்பட்டுள்ள இந்த மனமாற்றத்தை சரியாக புரிந்து கொண்ட கேமரா தயாரிப்பு நிறுவனங்கள், இத் தலைமுறையினரை தங்கள் வசம் தக்கவைத்துக்கொள்ள விரும்புகின்றனர். இதனால் முன்னணி கேமரா தயாரிப்பு நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு மிரர்லஸ் கேமரா தொழில்நுட்பத்தில், சினிமா கேமராக்களுக்கு இணையாக புதுப்புது வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றனர்.

ஒளிப்படத் துறையில் மிரர்லஸ் தொழில்நுட்பம் ஒருபுறம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில் , இன்னும்ம் கூட டிஎஸ்எல்ஆர் கேமராக்களை நம்பிக்கையுடன் பயன்படுத்திவரும் ஒளிப்படக் கலைஞர்களின் எதிர்காலம் குறித்து பல கேள்விகள், ஒரு தரப்பு கலைஞர்களால் தொடர்ந்து எழுப்பப்பட்டு




வருகின்றன. ஒளிப்படக் கலையின் அடிப்படை என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இதில் யாருக்கும் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. அதேசமயம் ஒளிப்பட தொழில்நுட்பம் என்பது, அந்தந்த காலகட்டத்திற்கு ஏற்ப , அதன் வடிவங்கள் என்பது அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கின்றன. உலோகம் பூசப்பட்ட கண்ணாடி பிளேட்டில் தொடங்கி, பிலிம் கேமராவில் புகைப்படம் எடுத்தது வரை இது நடந்துள்ளது. ஆனாலும் ஒளிப்பட துறையில் பிலிம் கேமரா தொழில்நுட்பம் , நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்தது. இதற்கு மாற்றாக வந்த டிஜிட்டல் எனப்படும் டிஎஸ்எல்ஆர் கேமரா தொழில்நுட்பத்தை அன்றைய ஒளிப்படக் கலைஞர்கள் யாரும் அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது பல கலைஞர்களுக்கு ஒளிப்பட தொழிலை தொடரலாமா அல்லது கைவிட்டு விடலாமா என்கிற தடுமாற்றம் அதிகமாகவே இருந்தது. இதில் சில கலைஞர்கள் தொழிலில் தொடர்ந்தார்கள் .பல கலைஞர்கள் இத்தொழிலை துறந்து சென்றார்கள். அதேபோன்றதொரு மனநிலை இப்போது பல கலைஞர்களிடம் ஏற்பட்டுள்ளது.

டிஎஸ்எல்ஆர் தொழில்நுட்பம் இன்னும் பல ஆண்டு காலம் நீடித்து நிலைத்து நிற்கும் என்று ஒரு தரப்பு ஒளிப்படக் கலைஞர்கள் உறுதியாகவும், கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இதற்கு நேர்மாறாக கேமரா தயாரிப்பு நிறுவனங்களின் செயல்பாடுகள் இருக்கின்றன. டிஎஸ்எல்ஆர் கேமரா, லென்ஸ் மற்றும் இத்தொழில் நுட்பம் சார்ந்த உபகரண தயாரிப்புகளை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாகவே நிறுத்திக் கொண்டன. சில நிறுவனங்கள் குறைத்துக் கொண்டன. நிலைமை இப்படி இருக்க, தொழில்நுட்பத்தை குறை கூறாமல் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறிச் செல்வது சாலச்சிறந்தது.

இன்று உலகமெங்கும் குவிந்துகிடக்கும் ஸ்மார்ட்போன் கேமராக்கள், டிஎஸ்எல்ஆர் தொழில் நுட்பத்திற்கு இணையாகத்தான் வெளியிடப்படுகிறது. டிஎஸ்எல்ஆர் கேமராவில் எடுக்கப்படும் புகைப்படங்களுக்கு கிடைக்காத மென்பொருள்கள், இன்று ஸ்மார்ட் போன் கேமராவில் புகைப்படம் எடுக்கும் புகைப்பட ஆர்வலர்களுக்கு எளிதாக கிடைக்கிறது. இதில் பயிற்சி பெற்ற புகைப்பட ஆர்வலர்கள் ஒரு முழுநேர ஒளிப்படக் கலைஞர்களுக்குறிய தகுதியை மிகக் குறுகிய காலத்தில் பெற்றுவிடுகின்றனர். சமூக ஊடகங்களில் இவர்களின் புகைப்படம் தான் நிரம்பி வழிகின்றன. இவர்கள் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறிச் செல்லும்போது, தரமான ஒரு தொழில்நுட்ப ஃபுல் பிரேம் கேமரா, 4கே குவாலிட்டி கேமரா என தேடிச் செல்கின்றனர். இங்கு டிஎஸ்எல்ஆர் கேமராவிற்கு வேலை இல்லை என்பதுதான் அவர்களின் கருத்தாக உள்ளது.




CVPA NEWS (Tamil & English ) Monthly Newspaper,
RNI No. 15261 /2005 (R.Dis no.1834/04)
Published by B.SRIDAR, on behalf of
Chennai Video & Photographers' Association,
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2.
Ph: 2860 7821 Email : cvpanews2019@gmail.com,
Website : www.cvpa.in
Printed by M.NAVANEETHAN, at Nava Jothi Achagam,
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : B.SRIDAR, Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821

Postal Registration no TN/ARD/11/2021-2023
WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.09.2021

To,